MVM Journal of Research Volume 4 Jan.-Dec., 2018

# தமிழ்விடு தூதின் சிறப்புகள்

**முனைவர் க.சின்னமணி**
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த்துறை
எம்வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக்கல்லூரி திண்டுக்கல்

---

## முன்னுரை

உயர்தனிச் செம்மொழியாகிய தமிழைத் தூதாக விட்ட இலக்கிய நூல் தமிழ்விடுதூது. ஒருவர் தன்னுடைய கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கும் பொருட்டு மற்றொருவருக்கு அனுப்பப்படுவது தூது. தூது நூல்களில் புகழ் பெற்றது தமிழ்விடு தூது. இந்நூலை இயற்றிய ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. தெய்வத்தைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட நூல்கள் அருள் கருதிப் பாடியவையாகும். மதுரை சோமசுந்தரக் கடவுள் மீது காதல் கொண்ட ஒரு தலைவி அவரிடம் தூது அனுப்பும் பொருளில் அமைந்தது தமிழ்விடு தூது. தூது நூல்களுள் ஈடு இணையற்றது தமிழ்விடு தூதேயாகும். சொக்கநாதரிடம் காதல் கொண்ட தலைவி தன் காதலைத் தெரிவித்து அவரது விருப்பம் அறிந்து வருமாறு தமிழைத் தூதனுப்பி வைப்பதாக இந்நூல் பாடப்பெற்றுள்ளது. இந்நூலில் மொத்தம் 268 கண்ணிகள் உள்ளன. நூலில் சொற்சுவையும் பொருள்சுவையும் ஆசிரியர் புலமைத்திறத்தையும் விளக்குகின்றன. தமிழின் பெருமையை முழுமையாகத் தெரிவிக்கும் இனிய நூலாகும். இலக்கணம், இலக்கியம், புராணம் மற்றும் வரலாற்றுச் செய்திகள் அனைத்தும் இதனுள் அடங்கியுள்ளன. சொற்சுவையும், பொருள் சுவையும் அமைந்த தமிழ்க்களஞ்சியம் தமிழ்விடுதூது. தமிழின் மாண்பும் சிவபெருமானின் அருட்செயல்களும் இந்நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. தமிழின் வளர்ச்சி, தமிழைத் தூதாக அனுப்புவதன் நோக்கம், தூது செல்வதற்குரிய வழிமுறைகள், தமிழின் பெருமைகள் போன்றவற்றை விளக்க முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தமிழின் வளர்ச்சி

தமிழ் உலமொழிகளுள் தொன்மையானது. செவ்வியல் பண்புகளைத் தன்னகத்தே கொண்டது. தமிழ் வளர் பருவங்களை பத்துப் பருவமாக்கி காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்ற முறையில் வளர்ந்தது தமிழ். அத்தகைய இயல்பு வாய்ந்த நின்னை ஒருவரால் மட்டும் வளர்க்க இயலாது. உலக மக்கள் அனைவரும் விரும்பும் கல்வியை உன்னிடமிருந்து கற்றுக் கொள்வார்கள். உனக்குக் கற்பிப்பவர் ஒருவரும் இல்லை. அவ்வளவு பெருஞ்சொற்களஞ்சியமாகத் திகழ்கிறாய்.

தமிழுக்கு அணியாக விளங்கும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கு செய்யுள் சொற்களும் பெயர், வினை, இடை, உரி ஆகிய செந்தமிழ்ச் சொற்களும், கைக்கிளை, பெருந்திணை, குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல், பாலை ஆகிய அகத்திணை ஏழும் வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்னும் ஏழு புறத்திணைகளும் விளக்கப்பட்டுள்ளன. அகப்பொருட்குரிய திணைகள் ஏழுண்டு என்பதை

> “கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப.” (தொல்.பொருள். அகத்.நூற்1)

தொல்காப்பியர் கூறியுள்ளதைப் போன்றே தமிழ்விடுதூது

“செய்யுள் சொல்நான்கும் உயர்செந்தமிழ்ச் சொல் ஓர் நான்கும்
மெய்உட்பொருள் ஏழ்விதத் திணையும்” (தூது.பா.28)

என்று கூறுகின்றது. தமிழ் வளர்ச்சியை மேலும் வளர்த்து உயர்வடையச் செய்யும் புலவரின் சிறப்பைக் காணமுடிகிறது.

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பிரிவினை உடையது. இந்த ஐந்து இலக்கணங்களில் எழுத்து, சொல் பற்றி தனித்தனி அதிகாரங்களையும் யாப்பு, அணி, பொருள் பற்றிப் பொருளதிகாரத்திலும் இலக்கண நூலார் கூறியுள்ளனர். தமிழ்விடு தூது நூலில் தமிழ் வளர்ச்சியை குறைகளற்ற எழுத்து அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினம் ஆகிய எட்டு யாப்பு உறுப்புகளும் தன்மை அணி, உருவகம், தீவகம் உட்பட முப்பத்தைந்து அணிகள் யாவும் பேரழகு வாய்ந்த மணமகனாகவும், குலமாகிய பாவின் கண் அமைந்த செப்பலோசை, அகவலோசை, துள்ளல்ஓசை, தூங்கலோசை ஆகியவை பட்டத்துராணிகளாகவும் சிறந்து விளங்குகின்றது.

“ஆதியாப்பு எட்டும் அலங்காரம் ஏழ் ஐந்தும்
பேதியாப் பேரெழில் மாப்பிள்ளையாய்” (தூது.பா.29)

எனக் கூறுகிறது தமிழ்விடு தூது. குழந்தைப் பருவம், பள்ளிப் பருவம் எனத் தமிழை வருணித்த புலவர் தமிழை மாப்பிள்ளையாகவும், பட்டத்தரசியாகவும் எடுத்துரைத்துள்ளார். எழுத்து, சொல், பொருள், யாப்பு அணியாக தமிழ் வளர்ச்சி பெற்று விளங்குவதைக் காணமுடிகிறது.

**தமிழைத் தூதாக அனுப்புவதன் நோக்கம்**

தூது என்பது, ஒரு தலைவனைக் கண்டு காதல் கொண்ட மங்கையொருத்தி, தன் காதலை உயர்திணைப் பொருளிடமோ, அஃறிணைப் பொருளிடமோ எடுத்துக் கூறித் தூது செல்லுமாறு ஏவுதலாகும்.

“காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்
தாமே தூதுவர் ஆதலும் உரித்தே” – (தொல், பொருள், களவு. நூற்.28)

என்ற தொல்காப்பியத்தின்படி தலைவன் தலைவியர் தாமே ஒருவருக்கு ஒருவர் தூதுவராகலும் உரித்தே என்றபடி தமிழ்விடு தூதில் இறைவன் பால் காதல் கொண்ட தலைவி பேசும், பேசாப்பொருள்களில் தூது அனுப்பும் முறையைத் தமிழ்விடு தூதில் காணமுடிகிறது.

கிளி சொன்னதைச் சொல்லுமே தவிர ஒருவார்த்தை கூட பேசத்தெரியாது. அப்புறம் எதற்கு இவை தூதுக்கு? அதுதான் காதலின் தனித்தன்மை, காதல் வந்துவிட்டால் இயற்கை எல்லாம் உதவி செய்யவல்லது. ஆகையால் முன்னே கூறியவை பேசினால் தான் என்ன? பேசாவிட்டால் தான் என்ன? உணர்வு வெளிப்பாட்டிற்கு அவை ஒரு சாக்கு அவ்வளவுதான் ஆனால் இதை வைத்துதான் எத்தனை எத்தனை இனிய இலக்கியங்கள் உருவாகியுள்ளன. தமிழைத் தூதாக விடத்துணிந்த தலைவியின் மனப்போக்காகப் புலவர்

“பெண்கள் எல்லாம் வாழப் பிறந்தமையால் என்மனத்தில்
புண்கள் எல்லாம் ஆறப்புரி கண்டாய்” (தூது.பா.106)

கூறுகிறார். பெண்கள் எல்லாம் நல்வாழ்வு பெற்று நலமாக வாழப் பிறந்துள்ளனர். காதல் வேதனை கொண்ட தலைவி அன்னத்தைத் தூது விடலாமா என்று பார்க்கிறாள் அட,

அன்னமாவது சொக்கநாதக்கடவுளைக் காண்பதாவது! காணாமலே கண்டதாக பொய் சொன்னாலும் சொல்லக்கூடும். ஏனென்றால் முன்னொருநாள் நான்முகன் அன்னப்பறவை வடிவெடுத்து சிவபெருமானின் முடியைத் தேடிப் பறந்து சென்று எங்கும் காணாமல் பாதிவழியில் திரும்பி வரும்போது சிவன் முடியில் இருந்து கீழே விழுந்த தாழம்பூவைப் பொய் சாட்சியாக வைத்து இறைவனது முடியைப் பார்த்து விட்டதாகப் பொய் சொல்லியது. அதனால் அன்னம் தூதுசெல்ல தோதுப்படாது என எண்ணினாள்.

வண்டைத் தூது அனுப்பலாம் என்று எண்ணிய போது இறைவன் வண்டை **'காமம் செப்பாது கண்டது மொழியுமோ'** என்று வண்டைப் பயமுறுத்தி இருக்கிறார். இறைவன் பால் நான் வைத்த காமத்தைச் சொல்லச் செல்லும் போது அவர் **'காமம் செப்பாதே'** என்றால் வண்டு என்ன செய்யும் பாவம் வண்டினம் அவர்பால் செல்ல அஞ்சும். மானைத் தூதுவிட்டால் சிவபெருமானின் இடுப்பில் உடுத்தியிருக்கும் புலித்தோலைப் பார்த்தவுடனே மான் பயந்து ஓடிவிடும் எனக் கருதிய தலைவி,

''இந்த மனத்தைத் தூதாய் ஏகுஎன்பேன் இம்மனமும்

அந்த மனோதீதர் பால் அண்டாதே'' (தூது.பா.111)

எனக் கூறுகிறது. அன்னப்பறவை, வண்டு, மான் இவை எதுவும் தூதாகச் செல்ல ஏற்றவை அல்ல எனக்கருதிய தலைவி மனதை தூதாகப் போய்வா என்று சொல்லலாம் என நினைத்தால் சொக்கநாதர் மனதுக்கு எட்டாதவர் என்பதால் பொற்குன்று போன்று திகழும் என் தமிழே! உன்னிடம் சொல்லுகிறேன். எனக்கொரு மாலை வாங்கி வந்து தரும் உதவியை செய்வாயாக. தூதனுப்பியவர் கூறிய சேதியைச் சொல்லி, அவர் அதற்கு இணக்கம் தெரிவிப்பாரானால், அதற்கு அடையாளமாக அவரிடமிருந்து ஓர் மாலையை வாங்கிவருதல் சிறப்பு.

''ஒரு தொடை வாங்கி உதவாயோ ஓர்சே
விருது உடையார்க்கு நீவேறோ'' (தூது.பா.114)

எனக் கூறி தமிழை தூது விட்ட செய்தியைத் தமிழ்விடு தூதுவில் காண முடிகிறது.

அறிவுரு வாராய்ந்த கல்வியம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு (குறள் - 684)

என்ற குறளுக்கு ஏற்ப அறிவு, உருவு, கல்வி மூன்றும் அமையப் பெற்ற ஒருவர் தமிழ் மட்டுமே தூது செல்ல சிறந்த பொருள் என்பதை உணர்ந்து இறைவன் பால் காதல் கொண்ட தலைவி தமிழை தூதுவிட்டதை உணரமுடிகிறது.

**தூது செல்வதற்குரிய வழிமுறைகள்**

தமிழை முறையாகப் படிக்காமல், படித்தவர்களைப் போல உளறிக் கொண்டிருப்பவர்கள் இருக்கும் பக்கம் போய் விடாதிரு தமிழே!

''கற்பார் பொருள்காணார் காசுபணம் காணில் உனை
விற்பார் அவர்பால் நீமேவாதே'' (தூது.பா.184)

என்ற தலைவி, தீயவர் பக்கம் செல்லாது நல்ல நூல்களைக் கற்றறிந்தவர் பால் மட்டுமே செல்ல வேண்டும் என்று தமிழை தூது அனுப்பிய தலைவி சில விதிமுறைகளைக் கூறும் பாங்கைக் காணலாம். தமிழே! உன்னைக் கற்றுணர்வதற்கு என்று சிலர் வருவார்கள். அவர்கள் பொருள் உணர்ந்து உன்னைக் கற்றுக்கொள்ள மாட்டார்கள். காசு, பணம் சம்பாதிக்க நினைத்து உன்னைக் கற்கும் அவர்கள் உன்னை விலைப்பொருளாக்கி விற்று விடுவார்கள் அவர்களை நீ அனுகாதே.

கல்வி கற்ற சான்றோர்களைச் சிலர் ஏளனம் செய்வர், கேலி பேசுவர், கற்றவர்கள் கூறிவிளக்கும் பொருள் நயம், சொல் நயம் கேட்டு மகிழமாட்டார்கள். மாறாக நாய் போலக் குறைப்பார்கள் இத்தகைய வீணர்கள் இருக்கும் பக்கமும் செல்லாதே.

“உரத்தின் வளம் பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அ.ஃ.தே போல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு” (நன் - 25)

என்றார் நன்னூலாளர். கல்வியானது உடலில் இருக்கின்ற அறிவு வளத்தை வளரச் செய்து, தீமையாகிய அறியாமையின் மிகுதியைக் கெடுக்கும். மரத்தினது கோணலைப் போக்கும் நூலின் தன்மையைப் போலவே மனிதருடைய மனத்தின் கோணலைப் போக்கும் தமிழ் நூலே! நூலறிவின் பயனை அறியாத ஒருவன் நூலின் கருத்தைச் சொல்ல முயலும் மூடர்பால் செல்லாதே. தமிழே நீ நல்ல நூல்களின் உயரிய பயனைப் பற்றிப் பேசவும் செய்யாதே. கற்றோர் இருக்கும் சபைக்குள் போகவே அஞ்சும் மூடர்பால் போகாதே.

“நம்பாதார் வீதிநணுகாதே நல்லார்கள்
தம்பால் இருந்து தரித்து ஏகி” (தூது.பா.198)

என்றபடி தமிழே உன்னை நம்பாதர் இருக்கும் தெருவீதிப் பக்கம் நீ போய் விடாதே. நல்லவர்களுடனேயே தங்கி இருந்து உன் பயணத்தை மேற்கொள்வாயாக எனப் புலம்பும் தலைவியின் புலம்பலைச் சுட்டும் புலவரின் தமிழ்ப் புலமையையும் அறிவு நுட்பத்தையும் தமிழ் விடுதூது நூல் மூலம் உணரமுடிகிறது.

**தமிழின் பெருமைகள்**

தமிழில் பல்வேறு நூல்கள் இருந்தாலும் அனைத்து நூல்களையும் உள்ளடக்கி தமிழுக்கு பெருமை சேர்ப்பது தமிழ்விடு தூது ஆகும். நூலின் சிறப்பை தொல்காப்பியம்,

“நூல் எனப்படுவது நுவலுங்காலை
முதலும் முடிவும் மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உள் நின்று அகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே”
(தொல்.பொருள். செய்யுள் நூற் -164)

எனக் கூறுகின்றது. இறைவன் மீது காதல் கொண்ட பெண் தமிழில் தோன்றியுள்ள அனைத்து நூலின் உயர்வையும், சிறப்பையும் தமிழ்விடு தூது நூலில் சுருங்கச் சொல்லி விளக்கும் பெருமை கொண்டுள்ளமையால் முதலும் முடிவும் சீராக அமையப்பெற்றுள்ளது. உலகத்தில் வாழும் மக்களுக்கு அழகு ஒன்றுதான். ஆனால் தமிழே! உன்னிடத்தில் அம்மை, அழகு,

தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகிய எட்டுவகை வனப்புகளும் அழகுறப் பெற்றுள்ளாய்.

தமிழிலக்கிய இலக்கணச் செய்திகள் வழி நின்று இருபொருள் தரத்தக்க சொற்களைப் பயன்படுத்தி தமிழின் பெருமையை எடுத்துக் கூறியுள்ள பாங்கைக் காணலாம். அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலுடன் ஐம்பாலையும் முப்பது சீர்களையும் கொண்டுள்ள தமிழே! உன்னை **வெண்பா** என்று சொல்வது உண்மையாகுமா? மூன்று யுகங்களிலும் சங்கத்தில் இருந்த உன்னைக் **கலிப்பா** என்று உரைப்பது முறையாகுமா? கெடாத இருள் போன்று பரவியிருக்கும் மயக்கத்தை மாற்றி மக்களை நல்வழிப்படுத்தும் உன்னை **மருட்பா** என்று கூறுவது நல்ல வழக்காகுமா? தெளிந்த பாடலின் முன் பத்துப் பொருத்தம் பொருந்தி நிற்கும் உன்னை **விருத்தம்** என்று கூறுவது முறையாகுமா?

"ஈரடிக்குள்ளே உலகமெல்லாம் அடங்கும் எனின்
நேரடிக்கு வேறே நிலன் உண்டோ" (தூது.பா.99)

என்றபடி, ஏழுசீர்ச் சொற்களுக்குள்ளே உலகுக்கு ஒழுக்க நெறி கூறிய தமிழின் பெருமையை என்னவென்று சொல்லுவது. இருளின் கூட்டத்தைக் கதிரவன், நிலவு, நெருப்பு என்ற முச்சுடரையும் முந்தி வந்து தம் ஒளியால் விலக்கும் பெருமை பெற்ற தமிழே! என் மனத்தின் இருளை மாற்றுவாயா? இனிய தமிழே என் மனத்தில் எழுந்த ஐயங்களை நீக்கி மயக்கமுற்ற செயலை ஆராய்ந்து மனம் இரங்கி உதவி புரிவதே உன் நீதியாகும். உன் செயதிகள் எல்லாவற்றையும் சொல்ல எனக்குத் தகுதியில்லை எனக் கூறும் புலவரின் மன உணர்வைக் காணமுடிகிறது. தமிழ் உலகிற்கு பெருமைகள் பல பெற்றுத் தந்த தமிழ்விடு தூது நூலின் சிறப்பைக் காணமுடிகிறது.

## முடிவுரை

தமிழ் அனைவரையும் வாழ வைத்து வளர வைக்கும் தன்மை கொண்டது. தெய்வத்தையே பின்பற்ற வைக்கும் கருத்துக்கள் நிறைந்த நல்ல நூல் தமிழ்விடு தூது. இது தமிழை மட்டுமின்றி தமிழர்களையும் வாழவைத்த அமிழ்தம்.

"இருந்தமிழே உன்னாலிருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" (தூது.பா.151)

என்ற அடிகளுக்கு ஏற்ப புகழும், பெருமையும் சேர்த்த தமிழே! இவ்வுலகத்தார் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதே உன்னால் தான் தேவர்கள் உண்ணும் அமுதத்தை இவ்வுலகத்திற்கு விருந்தளித்த தமிழின் வளர்ச்சியையும், பெருமையையும், உயர்வையும் காணமுடிகிறது.